கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதல் கலைமாணித் தேர்வு 1999/2000 (வெளிவாரி)
(டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

LIBR... 21 Ju... Eastern University, Sri...

## PHY 101 மெய்யியற் பிரச்சினைகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

கவனிக்க:

பகுதி - I இலிருந்து இரண்டு வினாக்களை மாத்திரமும், பகுதி-II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்கட்கு விடை தருக.

---

### பகுதி - I

01. (அ) பின்வரும் எடுப்புக்களை நாற்பிரிவுத்திட்ட எடுப்பு வகுதிக்குள் எவ்வாறு அடக்குவீர் என கூறுக.

(i) நல்ல எழுத்தாளர்கள் அனைவரும் நல்ல பேச்சாளர்கள் அல்ல.

(ii) ஏறத்தாழ அனைவருமே தொற்று நோயினால் பீடிக்கப் பட்டுள்ளனர்.

(iii) எல்லா மனிதர்களும் சிலவேளைகளில் தவறிழைப்பவர் ஆவர்.

(iv) ஒன்றைத் தவிர என்னுடைய ஏனைய வினாக்கள் சரியானவை ஆகும்.

(1x4=4 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் சந்தர்ப்பங்களுக்கேற்ற வகையினதான மொழிநடை உதாரணங்கள் தருக.

(i) எடுகூற்றுக்கள் உண்மையாகவும், முடிவு பொய்யாகவும் அமைந்த வாய்ப்பற்ற வாதம்.

(ii) எடுகூற்றுக்கள் பொய்யாகவும், முடிவு உண்மையாகவும் அமைந்த வாய்ப்பான வாதம்.

(2x2=4 புள்ளிகள்)

(இ) உண்மை, வாய்ப்பு என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டினை உதாரணந் தந்து விளக்குக.

(04 புள்ளிகள்)

(ஈ) "உண்மையில் இல்லாதனவற்றைப்" பற்றி கூறும் எடுப்புக்களின் மீது எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தினை பிரயோகிக்கும்போது எழும் பிரச்சினைகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(உ) "எல்லா காகங்களும் பாடுபவை" எனும் எடுப்பு எதிர்மறை, மறுதலை, வழிப்படுத்தி எனும் நிலைகளில் எவ்வாறான தர்க்கப் பெறுமதிகளை பெறும் என கூறுக.

(03 புள்ளிகள்)

(அ) முதலாம் உருவினையும், இரண்டாம் உருவினையும் குறிப்பிட்டு, அவற்றிற்கான விசேட நிபந்தனைகளையும் எடுத்துக் காட்டுக.

(04 புள்ளிகள்)

(ஆ) இரு குறை எடுகூற்றுக்களிலிருந்து ஏன் எதுவித முடிவினையும் அனுமானிக்க முடியாது என்பதை நியாயத் தொடையின் பிரதான விதிகளின் துணையுடன் விளக்குக.

(04 புள்ளிகள்)

(இ) பின்வரும், இருதலைக்கோள் வாத வடிவங்கள் எவ்வகையானவை எனக் கூறுக.

(i) நான் வயலுக்கு போனால் மாடுகளை காணலாம். அத்துடன் நான் வீதியால் போனால் கமக்காரனைக் காணலாம்.
ஒன்றில் நான் வயலுக்கு போவேன் அல்லது வீதியால் போவேன்
ஆகவே ஒன்றில் நான் மாடுகளை காண்பேன் அல்லது கமக்காரனைக் காண்பேன்

(ii) நான் பாடினால் அவள் ஆடுவாள் அத்துடன் நான் சிரித்தால் அவள் ஆடுவாள்
ஒன்றில் நான் பாடுவேன் அல்லது சிரிப்பேன் ஆகவே அவள் ஆடுவாள்

(04 புள்ளிகள்)

LIBR... 21 JUL ... Eastern University, Sri...

(ஈ) நேர்மாற்றம் என்றால் என்னவென வரையறுத்து, மறுமாற்ற நேர் மாற்றத்தினை நால்வகை எடுப்புக்களின் மீதும் நிகழ்த்திக் காட்டுக.

(06 புள்ளிகள்)

(உ) பின்வரும் எடுப்புக்களின் மீது எதிர்மாற்றம் நிகழ்த்திக் காட்டுக.

(i) எல்லா கண்களும் மின்னுபவை
(ii) சில கண்கள் மின்னுபவை

(02 புள்ளிகள்)

03. பின்வரும் தேற்றங்களை நிறுவிக் காட்டுக.

(i) $(P \vee Q) \leftrightarrow (Q \vee P)$

(ii) $(P \vee \sim P)$

(iii) $(P \rightarrow Q) \leftrightarrow \sim (P \wedge \sim Q)$

(iv) $(\sim P \wedge \sim Q) \rightarrow (P \leftrightarrow Q)$

04. பின்வரும் எடுப்புக்களை, தர்க்க வடிவில் ஒழுங்கமைத்து வெண் வரைபட உதவியுடன் அவற்றின் வாய்ப்பினைத் துணிக.

(i) (அ) பீட்டரும், கமலாவும் பாடுபவர்கள்; எல்லா மனிதரும் பாடுபவர்களாயிருந்து, பீட்டரும் கமலாவும் மனிதர்களாக இருக்கின்றவர்களாதலால்.

(ஆ) பெண்கள் இருக்க முடியும், கமலாவும், விமலாவும் பெண்களாக இருக்கின்றதனால்.

(இ) சில மாணவர்கள், கெட்டிக்காரர்கள் என்பதுடன் பாடுபவர்கள் ஏனெனில் கெட்டிக்காரர்கள் பாடுவர்களாகவும், சில மாணவர்கள் பாடுபவர்களுமாதலால்.

(3x3=9 புள்ளிகள்)

(ii) வகுப்பு, வெற்று வகுப்பு உரையாடல் உலகு எனும் எண்ணக்கருக்களை விளக்குக.

(2x3=6 புள்ளிகள்)

(iii) 'பீட்டர் புத்திசாலி' எனும் எடுப்பு பாரம்பரிய அளவையியலிலும், நவீன அளவையியலிலும் வேறுபடுமாற்றலை விளக்குக.

(05 புள்ளிகள்)

## பகுதி - II

05. (அ) கிரேக்க மெய்யியலிற்குள் உள்ளடங்கும் நான்கு கால பண்புகளையும் எடுத்துக் காட்டுக. (10 புள்ளிகள்)

(ஆ) சமகால மெய்யியற் பண்புகள் அதற்கு முந்தைய கால பண்புகளிலிருந்து வேறுபடுகின்றதா? விமர்சனம் செய்க. (10 புள்ளிகள்)

06. (அ) அனுபவ முதல்வாதம், காரணமுதல் வாதம் எனும் அறிவாராய்ச்சியியற் கூடங்களை வேறுபடுத்திக் காட்டுக. (10 புள்ளிகள்)

(ஆ) "கடவுள் இருப்புத்" தொடர்பாக 'டேக்கார்ட்ஸ்' என்பார் முன்வைத்த கருத்துக்களை விளக்குக. (10 புள்ளிகள்)

07. (அ) இந்திய மெய்யியலில் அறிவின் பிரதான மூலங்களாக கருதப்படும் விடயங்களை தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ஆ) பௌத்தத்தில் கூறப்படும் "விடுதலை" எனும் எண்ணக் கருவினை தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

08. (அ) சுகமரணம் (Euthanasia), செயற்கை கருத்தரிப்பு (Artificial Insemination) கருச்சிதைவு(Abortion) எனும் விடயங்கள் ஒழுக்க ரீதியாக அனுமதிக்கப்படக்கூடியவையா? என்பதனை மருத்துவ ஒழுக்கவியல் அடிப்படையில் (Medical Ethics) விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) கலை பற்றிய மெய்யியலாளனினதும், ஒழுக்கவியலாளனி-னதும் மதிப்பீடுகள் எவ்வாறு அமையவேண்டும் என நீர் எதிர்ப்பார்க்கின்றீர் என விளக்குக. (10 புள்ளிகள்)

09. (அ) உண்மை பற்றிய மரபு ரீதியான கோட்பாடுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) சமகால மெய்யியலில் "வாய்ப்பு பார்த்தல் கோட்பாடு" எந்தளவு முக்கியம் பெறுகின்றது என விளக்குக. (10 புள்ளிகள்)

10. எவையேனும் நான்கிற்கு குறிப்பெழுதுக.

(அ) உடல் - உளப் பிரச்சினை
(ஆ) தண்டணைக் கொள்கைகள்
(இ) மொழியும், மெய்யியலும்
(ஈ) காரணவாதம் (Causality)
(உ) தொகுத்தறி பிரச்சினை

(4x5=20 புள்ளிகள்)

*****